

திருவள்ளூர் மத்திய மாவட்டம் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பின் கீழ் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் சட்ட மன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி பி.டி.சி.செல்வராஜ், கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் , த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வஷரன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் , ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன், சன்.பிரகாஷ், சே.பிரேம் ஆனந்த், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயணபிரசாத், தி.வை.ரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி உட்பட்டதிருத்தணி ஒன்றிய மத்தூர் கிராமத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்த நபார்டு திட்டத்தின் கீழ் 3 கோடியே 47 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளி கட்டிடத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.சந்திரன், எம். எல். ஏ. குத்துவிளக்கு ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி வகுப்பறைக்கு அனுப்பி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணன், ஏ.எல். விஜயகுமார், அகூர் மாணிக்கம், கன்னியப்பன், கோவர்த்தனன், ஹரி பாபு,டில்லிபாபு, கமல நாதன்,கோவேந்தன், உள்பட பள்ளி மாணவ மாணவிகள் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

### கேக் வெட்டி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது! கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்பு!

# கத்தார் அயலக அணி சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது! ஆரூர் பாலாஜி – கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமை!

சென்னை, ஜுன் 10-

முத்தமிழிறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், ஜி.எஸ்.ஆர். சத்தியராஜ், பரந்தாமன், ஹக்கீம் மற்றும் முகமது ரபீக் ஆகியோர் முன்னிலையிலும், கத்தார் தி.மு.க. அயலக அணி நிர்வாகிகளான தஞ்சை ஜி.செந்தில், குரும்பூர் தாஹிர், விக்னேஷ், சதீஷ், பவித், இப்திகார், சவுக்கத் அலி,அருள், சுதானந்தம், கங்காதரன், மெய்யநாதன், ஷேக் அப்துல்லா, பங்கேற்புடன் அமைப்பாளர் மதன் குமார் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள் மோகன்குமார், ரவீந்திர பிரசாத், ராம செல்வம், வலியுல்லா சேன், கத்தாரில், திருமதி வாசுகி சத்யபாபு, திருமதி வானேஸ்வரி மோகன், இப்ராஹிம் யாசின், முகிலன், ரியாஸ், தொகுப்பாளர் ஆர்.ஜே.மிரண்டா, பெண்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் கருத்துரை வழங்கினர்!

# மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. – நொளம்பூர் வே.ராஜன் – அய்யப்பாக்கம் துரைவீரமணி – பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

சென்னை, ஜுன் 10 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (09.06.2025) காரம்பாக்கம் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள சென்னை லீ பேலஸ் ஹோட்டலில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி, தலைமையிலும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி. வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.



சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி, 50 வது வட்டக் கழக சார்பில் ஆர்.வி.கணேஷ் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., தா.இளைய அருணா எம்.சி., இரா.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரிம் ஆர்.மூர்த்தி காலை சிற்றுண்டி வழங்கினார். உடன் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு சென்னை மண்டல பொறுப்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் பி.டி. பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், மாநில தகவல் நுட்ப அணி இணை செயலாளர் எஸ்.பத்மபிரியா, தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார், எம்.சி., பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி. கே. ராஜி, ஆர்.கார்ணல், தீ.பாலாஜி, ஆ.மாலினி, எம்.சி., ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், ஏ. எம்.யுவராஜா, ஆர். கௌரிசங்கர், ப.கிரிஜா, என்.ரவி, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், அ.விஜயபாலா, கே.குமரேசன், எஸ்.பி.அருள், மா.இ.அ.து.அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ், எம்.சி., செ.ரவி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ.மோசஸ், ஜெ.பாஸ்கரன், தி.சார்லஸ், ஏ.செல்வம், எஸ். ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணதாசன், எம்.எம். ஜெயரத்தினம், ப.ஆலன், எம்.ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் செல்வரமேஷ், ஹேமலதா கணபதி, சாந்திராமலிங்கம், எம்.இ.ஸ்டாலின், ரமணி மாதவன், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகள் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### செஞ்சி ஒன்றியத்தில்

# மகளிர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜுன் 10 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நரசிங்க ராயன்பேட்டை ஊராட்சி எம்ஜிஆர் நகர் மாரியம்மன் கோவில் அருகில் சமூக நலத்துறை சார்பில் மகளிர் நல வாரியத்தில் கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர், பேரிளம் பெண்கள், ஆகியோர்களுக்கு உதவிடும் நோக்கில் சுயதொழில் மானியத்துடன் வங்கி கடன், ஒய்வூதியம், அனைத்து திட்டங் களில் முன்னுரிமை அளிக்கும் வகையில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை யினை துரிதப்படுத்தும் வகையில் புதிய உறுப்பினர் சேர்க்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர் பிலால் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மகளிர் நல வாரியத்தில் செயல்படுத்தப் படும் பல்வேறு சிறப்பு திட்டங்களை எடுத்துரைத்தும், மகளிர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாசங்கர், ஊராட்சி செயலாளர் சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன்,வனக்குழு தலைவர் ராமு, மாவட்டப் பிரதிநிதிகள் அய்யாதுரை, கதிரவன், தொண்டரணி பாஷா, வாசு, பழனி, செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### இன்று திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் மற்றும்

# மாவட்ட அணிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு

திருவள்ளூர் ஜீன் 10;-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று 10-06-2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கழக துணைச் பொதுச் செயலாளர் ஆ.இராசா, அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆலோசனை படி மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம். எல். ரவி, எஸ். ரமேஷ், கே. சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி , பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதர சன், அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ. கே.சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே. சந்திரசேகர், நா.செல்வசே கரன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன்,



மு.முரளிதரன், ஆ.ராஜா, வே. ஆனந்த் குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஜி.ரவிக்கு மார், இரா. அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் ;- முதல்வர் - தலைவர் உத்தரவின்படி "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்ட மன்றத் தொகுதிகளில் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கும் மாபெரும் முகாம் குறித்து அறிக்கையின் வாயிலாக மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்தார் .

### உத்திரமேரூர் பேரூர்—11வது வார்டு கழக முன்னோடி

# இரா.கிருஷ்ணகுமார் இல்லத் திருமண வரவேற்பு!

### நல்லி குப்புசாமி – பேரா மு.நாகநாதன் முன்னிலையில் இன்று நடைபெறுகிறது!

காஞ்சிபுரம், ஜுன். 10-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் பேரூர் 11வது வார்டு கிளைக் கழக துணைச் செயலாளர் இரா.கிருஷ்ண குமார் - கே.ராஜநந்தினி ஆகியோரின் புதல்வர்கே.கோகுல்சாதிக்கும் சென்னை சென்னீர்குப்பம் எம்.எஸ்.பிரபாகரன் - எம். பி.ஹேமலதா ஆகியோரின் புதல்வி எம்.பி. மதுமிதாவுக்



கும் திருமண வரவேற்பு விழா சென்னை திருவேற்காடு, கோலடி தெரு, கே.என்.வி. நகரில் அமைந்துள்ள ஸ்ரீராமாலயா பேலஸில் நடைபெறுகிறது. பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி, பேரா மு.நாகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இம்மணவிழா வரவேற்பில் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் அவர்களின் ஆலோசனைப்படி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பூதூர் ஊராட்சியில் உள்ள இளம் கால்பந்தாட்ட விளையாட்டு வீரர்களுக்கு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் கால்பந்தாட்ட உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் நா.பரசுராமன், கிளை கழக செயலாளர்கள் ராமு, என்.முகமது அலி, எஸ்.கே.மணி, நாகராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

### ஜுன் 10 (2019)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

"புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. பொற்கோ

### ஜுன் 10 (2014)



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் 'சமுதாயச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். 'தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு', 'தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு' ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

"த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**